# D E P O S I T I O N O F W I T N E S S

( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.

Case No. CC.79/2015

**P.W**. 1(LW2)

| | |
|---|---|
| Name | : **திரு.நேத்தாஜி** |
| Father/Husband Name | : திரு,பெருமாள் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.06.2026

முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது முள்ளிக்கொளத்தூர் கிராமத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். சாட்சி பெருமாள் என்னுடைய அப்பா ஆவார். அவர் இறந்துவிட்டார். ஆஜர் எதிரிகளை தெரியும்.

2) கடந்த 28.11.2012 ம் தேதி காலை 7.00 மணியளவில் எனது வீட்டிலிருந்து எங்கள் கழனியில் உள்ள மோட்டாருக்கு டீசல் எடுத்துக் கொண்டு சென்றேன். அப்போது கோவிந்தராஜ் மற்றும் தனலட்சுமி ஆகியோர் எங்கள் கழனியில் உள்ள வாழை மரத்திற்கு பின்னால் மறைந்திருந்து அவர்கள் கையில் வைத்திருந்த உருட்டுக் கட்டையை வைத்து என்னை தாக்கினார்கள். என்னை கம்பத்தில் கட்டிப்போட்டு கத்தியால் காலில் வெட்டினார்கள். என்னை பார்த்து அசிங்கமாக தேவிடியா பையா என்று சொல்லி என்னை தாக்கினார்கள். என்

அப்பாவும், பாலு என்பவரும் என்னை அவிழ்த்துவிட்டார்கள். எனக்கு காலில் இருந்து ரத்தம் வரவே நான் மயங்கிவிட்டேன். என்னை செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தார்கள். வழக்கு சம்பவம் குறித்து எனது அப்பா காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார். எங்களுக்கும் ஆஜர் எதிரிகளுக்கும் ஏற்கனவே முன் விரோதம் இருந்தது. போலிசார் விசாரணை செய்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> –

நான் சொல்வது போல் சொன்ன தேதியில், சொன்ன இடத்தில் எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், எனது அப்பாவும் பாலு என்பவரும் சம்பவ இடத்திற்கு வரவில்லை என்றாலும் சரியல்ல. நானாக தன்னிச்சையாக சென்று செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தேன் என்று சொன்னால் சரியல்ல. நான் இந்த வழக்கு சம்பவம் குறித்து புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் அரசு மருத்துவமனையில் உள்ள மருத்துவமனை புறக்காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அந்த புகாரில் வாழை மரத்திற்கு பின்னால் மறைந்திருந்து வந்து எதிரிகள் என்னை கட்டையாலும், கத்தியை கொண்டும் தாக்கினார்கள் என்றும், என்னை கட்டிப்போட்டு தாக்கினார்கள் என்றும், அசிங்கமாக பேசினார்கள் என்றும், என் அப்பாவும், பாலுவும் வந்து என்னை கழட்டி விட்டார்கள் என்றும் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் புகாரிலும் போலிஸ் விசாரணையிலும் சொல்லவில்லை என்றாலும், எதிரிகள் மீதுள்ள பகையின் காரணமாக தற்போது நடக்காத ஒரு சம்பவத்தை நடந்ததாக குறிப்பிட்டு சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எங்கள் ஊரில் முள்ளிக்கொளத்தூர் சட்ராஸ் மெயின் ரோடு, மற்றும் மேட்டு தெரு,

பஜனை கோயில் தெரு ஆகிய இடங்கள் உள்ளன என்றால் சரிதான். நான் முள்ளிக்கொளத்தூர் சட்ராஸ் மெயின் ரோட்டில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். ஆஜர் எதிரிகளின் மகள் அம்பிகா RVG கலைக் கல்லூரியில் படித்து வந்தார் என்றால் சரிதான். அவரது மகளை ஒருதலையாக காதல் செய்து அவரை தினமும் பின்தொடர்ந்து சென்று தொந்தரவு செய்தேன் என்றால் சரியல்ல. இது சம்மந்தமாக ஊர் தலைவர்கள் அனைவரும் சேர்ந்து பஞ்சாயத்து செய்து என்னை எச்சரித்தார்கள் என்றால் சரியல்ல. அதன் பிறகு அந்த பெண்ணிற்கு கோபால் என்பவருடன் திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். ஆஜர் எதிரிகளின் மகளுடன் எனக்கு திருமணம் நடைபெறாததல் ஆஜர் எதிரிகள் குடும்பத்துடன் எனக்கு முன் பகை இருந்தது என்றால் சரியல்ல. எனக்கு குடிபழக்கம் இருந்தது என்றால் சரிதான். ஆஜர் எதிரிகளின் மகளை எனக்கு திருமணம் செய்து வைக்காததால் அடிக்கடி அவர்கள் வீட்டிற்கு சென்று தகராறு செய்தேன் என்றாலும் அது சம்மந்தமாக ஆஜர் எதிரிகள் எனக்கு எதிராக புகார் கொடுத்ததை என்னுடைய உறவினர் ஒருவர் காவல் துறையில் பணியாற்றி வருகிறவரின் செல்வாக்கை பயன்படுத்தி என் மீது நடவடிக்கை எடுக்காதவாறு பார்த்துக் கொண்டேன் என்றால் சரியல்ல. நான் மருத்துவமனையில் 4 நாட்கள் வரை சிகிச்சையில் இருந்தேன். போலிசார் எதிரிகள் பயன்படுத்தியதாக சொல்லப்படும் உருட்டுக்கட்டை, கயிறு, மற்றும் கத்தியை கைப்பற்றினார்களா என்றால் கைப்பற்றினார்கள். நான் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் எதிரிகள் என்னை தாக்கவில்லை என்றால் சரியல்ல. கடந்த 28.11.2012 ம் தேதி முள்ளிக்கொளத்தூர் சட்ராஸ் மெயின் ரோட்டில் எனக்கு தெரிந்த 3 நபர்களால் சவுக்கு கட்டையால் தாக்கப்பட்டு அதனால் எனக்கு காயம் ஏற்பட்டது என்றால்

சரியல்ல. அந்த சம்பவத்தின் காயத்தை வைத்து எதிரிகளை பழிவாங்கவேண்டும் என்ற நோக்கத்தோடு காலதாமதமாக புகார் கொடுத்து தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open Court read over in the witness in the present of the accused and admitted by the witness to be correct.

(Sd)S.Vineeth
J.M./TKM.